**O.S.No. 232/2013**

**DW1 : ரமேஷ்.** தேதி 04.02.2026

**வா.சா.1 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 16 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1 ம் பிரதிவாதி என் தாயார், 2 ம் பிரதிவாதி என் சகோதரர். 4 ம் பிரதிவாதி என் தாத்தா. 5 ம் பிரதிவாதி தங்கவேலு என்னுடைய மாமா. 6, 7 பிரதிவாதிகள் என் தாயாரின் சகோதரிகள். தாவாச் சொத்துக்களில் 4.72 ஏக்கர் பூமியை 27.06.1988 மற்றும் 22.11.1990 ஆகிய தேதிகளில் என் தாத்தா சீரங்க கவுண்டர் என் தாயாருக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் சரிதான். 1988 ல் ஏற்பட்ட ஆவணத்தில் என் மாமா தங்கவேலு சாட்சி கையெழுத்திட்டுள்ளார். அவர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளதால் என் தாத்தா என் தாயாருக்கு எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தை என் மாமா ஒப்புக கொண்டதாக சொல்கிறேனா? என்றால் ஆமாம். தான செட்டில்மெண்ட் பத்திர சொத்துக்கள் அனைத்தும் என் தாத்தாவிற்கு பூர்வீகச் சொத்துக்கள் என்றும் அதனால்தான் என் தாய்மாமாவிடம் சாட்சி கையெழுத்து வாங்கி எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 1991 ல் ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் 5 ம் பிரதிவாதி அ .வ.எண்.621/1991 என்ற வழக்கை பாகப் பிரிவினை கோரி தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். ஆனால் அதைப் பற்றி தெரியாது. தற்போது அந்த ஆவணங்களைப் பார்த்திருக்கிறேன். பாகப் பிரிவினை கோரிதான் தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கில் என் தாயாரும் தரப்பினர் என்றால் சரிதான். அந்த வழக்கில் என் மாமா தாவாச் சொத்துக்கள் பூர்வீக்ச சொத்துக்கள் என்று சொல்லிதான் தாவா தாகக்ல் செய்திருந்தார் என்றால் பொது சொத்து பாதி என்றும் சுயார்ஜித சொத்து பாதி என்றும் சொல்லியிருந்தார். அந்த வழக்கில் என் மாமாவிற்கு ½ பங்கு தீர்ப்பானது என்றால் சரிதான். அந்த வழக்கில் இறுதிநிலைத் தீர்ப்பாணைக்காக தங்கவேலு மனு செய்ததிரல் அவருக்க ½ பங்கு ஒதுக்கீடு செய்யப்பபட்டது என்றால் சரிதான். மேறபடி தங்ஹகவேலுழக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சொத்து இந்த வழக்கில் தாவாச் சொத்தாக காட்டடப்ப்டுள்ளது. மேற்படி வழகக்கில் இறுதிநிலை தீர்ப்பாணை வழக்கில் என் தாயாரும் தரப்பினராக இருந்தார். என் தாயார், என் தாத்தா ஆகியோருக்க ஒரு பகுதி ஒதுக்கீடு செய்ப்பபட்டது என்றால் சரியல்ல. என் தாத்தா உயிருடன் இருக்கும்

வரை மேற்படி இறுதிநிலைத் தீர்ப்பாணையில் ஒதுக்கீடு செய்தது சம்பந்தமாக இதுவரை ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரிதான். என் தாயாரும் அதேபோல் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரிதான். அந்த இறுதிநிலைத் தீர்ப்பாணைக்குப் பின்னிட்டு சீரங்க கவுண்டருக்கு பாத்தியம் இல்லாத சொத்தைப் பொருத்து எழுதி வைத்த கிரய ஆவணங்கள் செல்லாது என்றால் சரியல்ல. நான் 1998ல் 20 செண்ட் கிரயம் வாங்கினேன். அ.வ.எண். 621/1991 வழக்க நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். அவ்வாறு நிலுவையில் இருக்கும்போது நான் வாங்கிய கிரயம் செல்லாது என்றால் சரிதான். இவ்வழக்கு வாதிகள் மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும்போதுதான் கிரயம் வாங்கியுள்ளார்கள் என்றும் அந்தக் கிரயமும் சட்டப்படி செல்லாது என்றால் சரிதான். 16ம் பிரதிவாதி சவீன்குமார் 5ம் பிரதிவாதி என் மாமா தங்கவேலுவின் மகன். 16ம் பிரதிவாதி அவருடைய பங்கைப் பொருத்து யாருக்கும் எழுதிக் கொடுக்கவில்லை என்றும், அதனால் மேற்படி வழக்கில் சேர்ந்துள்ளார் என்றும், அவருடைய பங்கை ஒதுக்கீடு செய்வதில் எனக்கு ஆட்சேபணை உள்ளதா? என்றால் ஆட்சேபணை உள்ளது. வாதிகளுக்கு தாவாச் சொத்தில் பாத்தியம் இல்லை என்றும், அவர்கள் கோரும் பாகப் பிரிவினைப் பரிகாரம் கிடைக்கத்தல்ல என்றும் சொன்னால் சரிதான். 16ம் பிரதிவாதிக்கு தாவாச் சொத்தில் பங்கு இல்லை என்று நான் எதிர்வாதம் செய்ய உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல.